இராமநாதபுரம் மாவட்டம்

அறிவிக்கை (Noticication)

சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்

ந.க.எண்./39854/2016 நாள்:06.03.2017

இராமநாதபுரம் மாவட்டத்தின் கீழ் இயங்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்திட்ட பள்ளி சத்துணவு மையங்களில் ஏற்பட்டுள்ள 163 சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு ரூ.950-2000+ தர ஊதியம் ரூ.200 என்ற ஊதிய விகிதத்தின் கீழ் நேரடி நியமனம் மூலம் நிரப்பிட பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இனசுழற்சி வாரியான காலப்பணியிட விபரம்

| வ.எண் | வகுப்பினர் | காலிபணியிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | 4 |
| 2. | ஆதிதிராவிடர் | 21 |
| 3. | பழங்குடியினர் | 1 |
| 4. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 29 |
| 5. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லீம்கள் | 4 |
| 6. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லீம் தவிர | 40 |
| 7. | பொதுப்பிரிவு | 46 |
| 8. | சிறுபாண்மையினர் நல பள்ளி | 18 |
| | மொத்தம் | 163 |

தகுதிகள்

| இனம் | வயது | கல்வித் தகுதி |
|---|---|---|
| பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் | 01.01.2017ம் தேதி அன்று 21 வயது பூர்த்தியடைந்தும், விண்ணப்பிக்கும் தேதி அன்று 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும் | 5ம் வகுப்பு தேர்ச்சி (அல்லது) தேர்ச்சி பெறாதவர். |
| பழங்குடியினர் | 01.01.2017ம் தேதி 18 வயது பூர்த்தியடைந்தும், விண்ணப்பிக்கும் தேதி அன்று 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும் | எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும். |

தூரச் சுற்றளவு:

- நியமன பணியிடத்திற்கும் விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே உள்ள தூரம் 3 கி.மீகுள் இருக்க வேண்டும் (ஊராட்சி - குக்கிராமம் - வருவாய் கிராமம் போன்றவைகள் கணக்கில் எடுத்துக் கொள்ள தேவையில்லை.)
- சத்துணவு மைய கணக்குகளை தனியே பராமரிக்க தகுதி பெற்றிருக்க வேண்டும்.

விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்கள் 20 வயது பூர்த்தியடைந்தவராகவும் 40 வயதிற்கு மிகாதவராகவும் மேற்காணும் கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும். மேற்படி பணியிடங்கள் அரசு விதிமுறைகளின்படியும் மாண்புமிகு நீதிமன்ற ஆணைக்குட்பட்டும் நிரப்பப்படும். கல்வித் தகுதி, இருப்பிடம், சாதி, விதவை/ கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் இதர முன்னுரிமை சான்றுக்கான ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

09.03.2017 முதல் 23.03.2017ந் தேதி பிற்பகல் 5.45 மணி வரை அலுவலக வேலை நாட்களில் (ஞாயிறு தவிர) தொடர்புடைய ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி அலுவலகங்களில் நேரடியாகவோ / தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.

காலிப்பணியிட விவரங்களும், இனசுழற்சி விவரங்களும் மற்றும் விண்ணப்ப படிவமும் http:\\ramanathapuram.nic.in என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. http:\\ramanathapuram.nic.in இணைய தளத்தில் இருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கொள்ள விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

(ஒம்)XXXX
மாவட்ட ஆட்சியர்,
இராமநாதபுரம்.

/உ.ந.உ.ப/

நேர்முக உதவியாளர்(ச.தி),
இராமநாதபுரம்.

07.3.17 7.3.17